| | |
|---|---|
| மையம் : ____________________ | பெயர்: ____________________ |
| மேற்பார்வையாளர் கையொப்பம்: ____________________ | பதிவு எண்: ____________________ |
| | நாள் : ____________________ |

**தமிழ் இணையக் கல்வி்க்கழகம்**

**சான்றிதழ்க் கல்வி**

**BA00 மேல்நிலை**

**எழுத்துத் தேர்வு – நவம்பர் – டிசம்பர் 2019**

**நேரம் : 1.30 மணி** — **மதிப்பெண் : 50**

Time : 1.30 hrs. — Total Marks : 50

**பகுதி – 1**

I. **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**
Read the following text and answer the questions given below in a single line. **(5x1=5)**

ஆத்திச்சூடி கடவுள் வாழ்த்து நீங்கலாக 108 ஓரடிப் பாக்களைக் கொண்டது. மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான நீதிகளை மிகச் சிறிய தொடர்களில், அகர வரிசைப்படி கூறுகிறது. ஆத்திச்சூடியை எழுதியவர் ஔவையார். இவர் பெண்பாற் புலவர். இவர் கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி முதலான நூல்களையும் இயற்றியுள்ளார். ஆத்திச்சூடி சிறுவர்களும் படித்துப் பயன்பெறும் வகையில் எளிமையாக இருப்பது இந்நூலின் சிறப்பாகும்.

**வினாக்கள் :**

1. ஆத்திச் சூடி எத்தனை ஓரடிப்பாக்களைக் கொண்டது?

____________________

2. ஆத்திச்சூடி அமைந்துள்ள வரிசை முறையைக் கூறு?

____________________

3. ஆத்திச்சூடியை எழுதியவர் யார்?

____________________

4. ஆத்திச் சூடியின் சிறப்பு யாது?

5. ஔவையாரின் வேறு நூல் ஒன்றினைக் கூறு?

---

**II. பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

Read the following poem and answer the questions given below in a single line.

**(5x1=5)**

மதுரைக்கு நேர் கிழக்கே
மழை பெய்யாக் கானலிலே
தங்கக் கலப்பை கொண்டு – சொக்கர்
தரிசுழுகப் போனாராம்

முத்து விதை பாவி
மிளகுச் சம்பா நாத்து நட்டு – சொக்கர்
பவளக்குடை பிடித்துப்
பயிர் பார்க்கப் போனாரம்

**வினாக்கள்**

1. எந்த இடத்தை உழப்போனார் சொக்கர்?

---

2. எதைக் கொண்டு உழப்போனார் சொக்கர்?

---

3. எந்த விதையை துவினார்?

---

4. எந்த நாத்தை நட்டார்?

---

5. எதைப்பிடித்துக் கொண்டு பயிர் பார்க்கப் போனார்?

**III. பின்வரும் சொற்களைப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க.**

Form meaningful sentences using the following words. **(5x2=10)**

1. பொறாமை

2. கடின உழைப்பு

3. நெல்லிக்கனி

4. புத்தர்

5. போற்றுகின்றனர்

**IV. பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**

Answer any Five of the following questions in a few lines. **(5x4=20)**

1. தமிழ் நாட்டின் பிரிவுகள் எத்தனை? அவையாவை?
2. வறுமையைப் படைக்கும் இறைவன் என்னவாகட்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்?
3. புத்தர் எதனால் அரண்மனை வாழ்க்கையைத் துறந்தார்?
4. எல்லாம் போச்சு கதையில் எது மூடப்பட்டது என்று யார் யார்க்குத் தெரிவித்தார்?
5. 'வேரும் வாழ்வும்' என்ற சிறுகதையில் இசுமாயில் பட்ட துயரங்கள் என்னென்ன?
6. தாலாட்டு குறித்து சிறு குறிப்பு வரைக.

7. கதிர்வேலன் ஏன் பள்ளிக்குச் செல்லவில்லை?
8. உயிரெழுத்து எத்தனை வகைப்படும் அவை யாவை?
9. தென் கரை நாட்டின் வளங்கள் யாவை?
10. ஆதிசூரனை ஏனாதி நாதர் கொல்லாமைக்கு உரிய காரணம் யாது?

**V பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக.**

Write a letter on any one of the given subjects. **(1x10=10)**

1. பள்ளிக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி நண்பனுக்கு கடிதம் வரைக.
2. பாரதியாரின் மொழி வாழ்த்து குறித்தோ பாரதி குறித்தோ ஒரு கட்டுரை கடிதம் தோழிக்கு வரைக.
3. படித்து முன்னேறுவேன் என்று மகன் தந்தைக்கு உறுதி தெரிவிக்குமாறு கடிதம் ஒன்றை வரைக.

*****